[1992 மார்ச் 11

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன்: பேரவைத் தலைவர் அவர்களே, புகழ் மிக்க சத்துணவுத் திட்டத்தின் மூலம் எத்தனை குழந்தைகள் நியூட்ரிஷனல் டெஃபிஸியன்ஸி டிஸீஸ்— அதாவது உணவுப் பற்றாக்குறையால் ஏற்படும் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர் அவர்களே. அதாவது இந்தத் திட்டத்தில் 9.06 மையங்களில் சுமார் 13 இலட்சம் குழந்தைகளின் எடை ஒவ்வொரு மாதமும் எடுக்கப்படுகிறது. ஊட்டச் சத்து திட்டத்தில் 7.5 இலட்சம் குழந்தைகள் 7,500 மையங்களில் பயன் பெறுகிறார்கள். மொத்தத்தில் 82 சதவீதம் குழந்தைகள் நல்ல உடல் நிலையைப் பெற்று இருக்கிறார்கள். பொதுவாக 2, 3 சதவீதம் குழந்தைகள்தான் மிகவும் இப்படிப்பட்ட எடை குறைவாகவும், நோய்வாய்ப்பட்டிருக்கின்ற குழந்தைகளாகவும் இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இவர்களுக்கு ஊட்டச் சத்துடன், மருத்துவமனை சிகிச்சை வழியும் தரப்படுகின்றது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 176, திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

176—

கால்நடை உதவி மருத்துவர்களுக்கு பதவி உயர்வு

*1583—திரு. ஆர். சிங்காரம்—

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவி இயக்குநர் பதவி உயர்வு 22 ஆண்டுகள் கழித்துத்தான் கிடைக்கும் என்பதை மாற்றி 10 ஆண்டுகளாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) 10 ஆண்டுகள் பணி முடித்த தேர்வுநிலை கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 2,500-ம் 20 ஆண்டு காலம் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு நிலை அடிப்படை ஊதியம் ரூ. 3,000-ம் வழங்கிட அரசாணை இருப்

பதால் உதவி இயக்நகுராக பதவி உயர்த்தப்படாவிட்டாலும் இவ்வூதியத்தை உதவி மருத்துவர்கள் பெற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:—

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு ஐந்தாவது ஊதியக் குழுவின்படி கால் நடை உதவி மருத்துவர்களின் ஊதிய விகிதம் கீழ்க்கண்டவாறு உள்ளது :—

கால்நடை உதவி மருத்துவர்—ரூ. 2,000—3,500.

10 ஆண்டுகள் பணிமுடித்த தேர்வுநிலை கால்நடை உதவி மருத்துவர்—ரூ. 2,200—4,000.

20 ஆண்டுகள் பணிமுடித்த சிறப்பு நிலை கால்நடை உதவி மருத்துவர்—ரூ. 2,500—4,200.

10 ஆண்டுகள் பணி முடித்த தேர்வுநிலை கால் நடை உதவி மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 2.500-ம். 20 ஆண்டுகள் காலம் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு நிலை அடிப்படை ஊதியம் ரூ. 3,000-ம் வழங்கிட அரசு ஆணை ஏதுமில்லை,

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது (அ) என்பதற்கு இல்லை என்று பதில் அளித்தார்கள். இந்த உதவி கால்நடை மருத்துவர்களுக்கு, உதவி இயக்குநர் பதவி உயர்வு 22 ஆண்டு கள் கழித்துத்தான் கிடைக்கிறது. ரிடையர்மெண்ட் ஸ்டேஜில் மேக்ஸிமம் அவர்கள் அடைந்து விடுகிறார்கள். கடைசியில் 10 ஆண்டு அல்லது 8 ஆண்டு தான் மிச்சம் இருக்கிறது ஆகவே 22 ஆண்டுகள் மேக்ஸிமம் சர்வீஸ் செய்கின்றவர்களுக்கு அந்த நிலையைக் குறைத்து 10 ஆண்டுகள் என்ற அந்த நிலையைஅடைந்தாலே புரோமோசன்செய்து மீண்டும்அவர்களுக்கு உத்திரவு அளிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ளது போல 10 ஆண்டுகள் பணி முடித்த தேர்வு நிலை கால்நடை உதவி மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் 2,500-ம், 20 ஆண்டுக் காலம் பணி முடித்த சிறப்புநிலை கால்நடை உதவி

மருத்துவர்களுக்கு அடிப்படை ஊதியம் 3,000-ம் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு இல்லை. இந்த 22 ஆண்டுகள் பற்றி சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கோரிக்கைக்கு, தற்போது நம்மிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 2-வது (ஆ) என்ற கேள்விக்குச் சிறப்பான பதில் அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொல்வது 22 ஆண்டுகள் முடிந்து தான் அவர்களுக்கு புரோமோஷன் கிடைக்கிறது. 22 ஆண்டுகள் மேக்ஸிமம் அவர்கள் அடைந்து விடுகிறார்கள். அதன் பிறகு புரோமோஷன் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் 22 ஆண்டுகள் கழித்துத்தான் புரோமோஷன் என்ற சூழ்நிலையை மாற்றி 10 ஆண்டுகள் கழித்து புரோமோஷன் கிடைப்பதற்கு மீண்டும் பரிசீலிக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இது பற்றிப் பரிசீலிக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 177, திரு. கா. சின்னசாமி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

177—

மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு உயர்த்துதல்.

*4184—திரு. கா. சின்னசாமி:—

மாண்புமிகு ஆதி திராவிட விடர் நலத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மலைவாழ் மக்கள் பழங்குடியினர்க்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவீதம் ஒதுக்கப்பட்டதை ஐந்து சதவீதமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,